அ.வ.எண்.28-2018

பெயர் - பெருமாள்ராஜ் (வா.சா.2)

நாள் - 25.03.2019

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி..</u>

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை எனக்கு வரவில்லை என்றால் சரியல்ல. என் தம்பி நாராயணசாமிதான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தாா்ள ன்றால் நானாகத்தான் வந்தேன். வாதியும் இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளாா் என்றால் சரிதான். என் தம்பி தாக்கல் செய்துள்ள வழக்கு விபரம் எனக்குப்படிக்கத்தெரியாததால், படித்துப்பாா்க்கவில்லை. ஞாபகமில்லை. நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். என் அப்பாவும், அம்மாவும் கிரையம் வாங்கிய சொத்தினைத்தான் என் தம்பி வழக்கு தாக்கல் செய்துள்ளாா் என்றால் சரிதான். என் அப்பா உயிரோடு இருந்த காலத்தில் பாகபிரிவினை பிரித்த ஆவணத்தினை சப்ரிஜிஸ்டா் அலுவலகத்தில் பதிந்துள்ளோமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த பாகபிரிவினை ஆவணத்தினை என் தம்பி எங்கு வைத்து எழுதினாா்என்ற விபரம் எனக்குத் தெரியாது. அதில் நாங்கள் 5பேரும் கையெழுத்து செய்தோம். மேற்படி பாகபிரிவினை பத்திரம் எழுதும் காலத்தில் என் தாயாா் உயிரோடு இல்லை. இறந்து விட்டாா். இவ்வழக்கில் நான் தரப்பினா் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ல் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதல்ல என்றால் சரியல்ல. நாங்கள் கையெழுத்து செய்யவில்லை என்றும், இவ்வழக்கு தாக்கல் செய்வதற்காக என் தம்பியால் மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 ல் யாா் யாா் சாட்சி கையெழுத்து செய்துள்ளாா்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நாளது தேதிவரை வழக்கில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் எங்களுடைய பங்காளிகளால் கூட்டாக அனுபவம் செய்யப்பட்டு வருகிறாா்கள் என்றும், பாகபிரிவினை செய்யப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு விபரங்கள் எதுவும் எனக்குத் தெரியாதென்றும், வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தம்பி சாத்தூரில் தான் குடியிருந்து வருகிறாா் என்றால் தற்போது ஊருக்கு வந்துவிட்டாா். வழக்கில் கூறுவது போன்று சொத்தினை அனுபவம் செய்து வந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பங்காளிகள் எந்தக்காலத்திலும் என் தம்பியை இடைஞ்சல் செய்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தம்பி பெயரில்

தவறாக பட்டா ஏற்பட்டுள்ளதை பயன்படுத்தி இவ்வழக்குதாக்கல் செய்துள்ளார் என்றும், நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், என் தம்பி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.